**<u>Sub Court, Eraniel</u>**

**O.S. No.99/2021**

Date: 08.10.2025.

பி.வா.சா.1 - திருமதி.சுமி

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

எனது தாத்தா மாதவன்பிள்ளை தனது சொத்தினை அவரின் 5 பிள்ளைகளுக்கு பிரித்துக்கொடுத்தார் என்றால், சரிதான். அவ்வாறு 1979 ல் பிரித்துக்கொடுத்த அவருடைய உயில் ஆவணம் வா.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த வா.சா.ஆ–1 ஆவணத்தில் பழைய சர்வே எண் தான் குறிப்பிட்டுள்ளது என்றாலும், ரீசர்வே எண் குறிப்பிடவில்லை என்றாலும், அதுவிபரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து பழைய சர்வே எண்.195 பி என்றால், சரிதான். உயில் படி அது 20 சென்டுகள் என்றால், சரிதான். அந்த 20 சென்றில் வடகற்றம் 7 அடி வீதியில் நடைபாதை உட்பட்டு தான் அந்த 20 சென்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த 7 அடி வழிபாதை என்பது 20 சென்றின் வடக்கு பக்கத்தில் தான் உள்ளது என்றால், சரிதான். அந்த 20 சென்றில் (Beneficiaries)பங்கடைந்த 3 நபர்களும் அந்த 7 அடி நடைபாதையில் தடங்கல் செய்யகூடாது என்று உயில் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த 20 சென்றில் மேற்கணைய 5 சென்டு வேலப்பனுக்கு கொடுக்கப்பட்டது என்றால், சரிதான். கிழக்கற்றம் 10 சென்டு வாதியின் தந்தை ஈஸ்வரசந்திரனுக்கு கொடுக்கப்பட்டது என்றால், சரிதான். நடுவில் உள்ள 5 சென்டு எனது தகப்பனார் கொச்சு பாபுவிற்கு கொடுக்கப்பட்டது. 1ம் பிரதி மது எனது உடன் பிறந்த சகோதரர். மேற்படி உயில் மூலமாக கிடைத்த 5 சென்டினை எனது தகப்பனார் வா.சா.ஆ–4 செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி

எனக்கும், எனது சகோதரர் மதுவிற்கும் எழுதிக்கொடுத்தார் என்றால், சரிதான். அந்த 5 சென்று கிழக்கணையா 2 1/2 எனது சகோதரர் மதுவிற்கும், மேற்கணையா 2 1/2 சென்றும் எனக்கும் ஒதுக்கப்பட்டது என்றால், சரிதான். 1ம் பிரதிவாதியின் சொத்தின் தொட்டு கிழக்கே உள்ளதுதான் வாதிக்குரிய 10 சென்டு என்றால், சரிதான். வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் சொத்தின் இடையில் மதில்சுவர் , வேலி ஏதும் கிடையாது என்றால், விலைக்கு வாங்கியவர்கள் கட்டிடம் கட்டியிருக்கிறார்கள். உயர்நீதிமன்றத்தில் CRP.No.150/2025 ல் எதிருரை நான் தான் தாக்கல் செய்தேன் என்றால் , சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படுவது அந்த CRP.No.150/2025 ல் Counter Affadivit என்றால் சரிதான் அது வா.சா.ஆ.12 ஆகும். வா.சா.ஆ–12 ன் பாரா 10 ல் எனக்கு உரிமைப்பட்ட சொத்து சர்வே எண்.271/26 ல் உள்ளது என்றும், அது சர்வே எண்.271/5 ல் இல்லை என்றும் நான் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–10 ரீசர்வே எண் 271 ற்கானது, அதில் 271/26 என்று ஒரு கண்டம் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ–10 ல் 271/22 விற்கு மேல் வேறு கண்டங்கள் இல்லை. நீதிமன்ற ஆணையர் சொத்தினை பார்வையிடும்போது சர்வேயரின் உதவியுடன் அளக்க உத்தரவிடப்பட்டது என்றால், சரிதான். 02.03.2022 ல் எனது தரப்பு வழக்கறிஞர் சொத்தினை பார்வையிட தாலுகா சர்வேயரின் உதவியுடன் அளக்கவேண்டும் என்று மெமோ தாக்கல் செய்தார் என்றால், சரிதான். வாதியின் மனுவின்பேரில் தாலுகா சர்வேயரின் உதவியுடன் வழக்கு பட்டிகை சொத்து நீதிமன்ற ஆணையரால் அளக்கப்பட்டது என்றால், சரிதான். நீதிமன்ற ஆணையர் வழக்கு பட்டிகை சொத்தினை பார்வையிட வந்தபோது நான் அங்கு இல்லை என்றால், சரியல்ல. தாலுகா

சர்வேயர் சொத்தினை உயில் பத்திரத்தின் அடிப்படையில் அளவீடு செய்து, 20 சென்றில் தாவா சொத்து ரீசர்வே எண்.271/5 ல் தான் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால், சரியல்ல. ரீசர்வே எண்.271/26 ற்கு FMB Plan என்னிடம் இல்லை. ரீசர்வே எண்.271/26 ன் படி அளக்கவேண்டும் என்று நீதிமன்ற ஆணையரிடம் நாங்கள் சொல்லவில்லை என்றால், சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள வரைப்படத்தில் எனது சொத்தும் , வாதியின் சொத்தும் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால், (சாட்சியிடம் ஆணையர் வரைபடமும் அறிக்கையும் பார்வைக்கு வழங்கப்பட்டது) சாட்சி வாதியின் சொத்து எங்கு காட்டப்பட்டிருக்கிறது என்று கேட்கிறார். உயிலில் குறிப்பிட்டுள்ள வழிபாதையும் ஆணையர் வரைப்படத்தில் காட்டியிருக்கிறார் என்றால், வரைபடத்தில் ஆணையர் தவறாக குறிப்பிட்டுள்ளார். உயர் நீதிமன்றத்தில் CRP.No.150/2025 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நான் படித்து பார்த்தேன். அந்த உத்தரவில் என்னுடைய Counter Affidavit ல் கூறிய விபரங்களை பத்தி 8 ல் குறிப்பிட்டுள்ளது என்றால், சரிதான். அதில் பத்தி 9 ல் வாதிக்கு மேற்கு பக்க எல்லையை குறிப்பிடுவது மட்டும் தான் இந்த நீதிமன்றத்தில் முடிவு செய்யப்படவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது என்றால், சரியல்ல. எனவே வாதி கேட்ட "A" பரிகாரம் உயர் நீதிமன்றம் வழங்கியிருக்கிறது என்றால், அதுவிபரம் எனக்கு புரியவில்லை. வாதியும், நானும் ரீசர்வே எண்.271/26 ல் தான் ஆவணங்கள் தாக்கல் செய்தோம் என்றாலும், நீதிமன்ற ஆணையர் பார்வையிட்ட போது தான் வழக்கு பட்டிகை சொத்து ரீசர்வே எண்.271/5 ல் தான் உள்ளது என்று குறிப்பிட்டதன் அடிப்படையில் தான், வாதி வழக்குரையில் ரீசர்வே எண்ணை 271/5 என்று திருத்தம் செய்தார் என்றால், 271/26 ல் எங்களுக்கு பட்டா,

கரதீர்வை மற்றும் வீடு கட்ட அனுமதி முதலானவை உண்டு. அந்த பஞ்சாயத்து கட்டிட அனுமதியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான், இனி தாக்கல் செய்யலாம். ரீசர்வே வரைபடம் அரசு ஆவணம் என்றால், சரிதான். அந்த அரசு ஆவணத்திற்கு எதிராக நான் இந்த நீதிமன்றத்தில் எந்த பரிகாரமும் கோரமுடியாது என்றால், வாதியும் கேட்கமுடியாது. நான் ரீசர்வே வரைபடத்தில் 271/26 குறிப்பிடவில்லை என்பதால் அந்த வரைபடத்தை திருத்தவேண்டும் என்று சர்வே துறையில் மனு ஏதும் கொடுக்கவில்லை என்றால், FMB Copy கேட்டிருக்கிறேன். ஆனால் Copy தரவில்லை. வாதியை கஷ்ட நஷ்ட படுத்த வேண்டும் என்று நான் இவ்வாறு எதிர்வழக்கு செய்கிறேன் என்றால், சரியல்ல. 1 பிரதிக்கு இந்த வழக்கினை நடத்த விருப்பம் இல்லை என்றாலும், அவருக்கு வேண்டி நான் இந்த வழக்கை நடத்துகிறேன் என்றால்,சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.